# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 30–01–2018–ம் தேதி செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியில் கீழ்கண்ட திட்டப்பணி செய்வதற்கு 15–12–2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 1 தாலுகா அலுவலகம் சந்திப்பு முதல் படப்பறை குளம் செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் மற்றும் வடிகால் ஒடை சரி செய்தல் | 7.50 | 1) R. சுரேஷ் ராஜ்<br>2) K. கோபுகுமார் | 0.02% குறைவு<br>6.13% அதிகம் |
| 2 | வார்டு 9 விளவங்கோடு William house முதல் நகராட்சி எல்கை முடிவு வரை சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 7.90 | 1) D. பிறேம்குமார்<br>2) P. பிறேம்குமார் | 0.05% குறைவு<br>1.65% அதிகம் |
| 3 | வார்டு 10 விளவங்கோடு சாலையிலிருந்து கிழங்குவிளை செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 4.90 | 1) S. தனிஷ்<br>2) D. பிறேம்குமார் | 0. 08% குறைவு<br>3.77% அதிகம் |
| 4 | வார்டு 15 தேவன்விளை சாலையில் பேவர் பிளாக் அமைத்தல் | 5.50 | 1) C. சுரேஷ்<br>2) A. சத்தியநேசன் | 0. 02% குறைவு<br>14.88% அதிகம் |
| 5 | வார்டு 21 சந்தை அருகில் Vinod Hospital செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 5.90 | 1) A. ஆன்றணி<br>2) P. ஜெயச்சந்திரன் | 0. 01% குறைவு<br>0.01% அதிகம் |
| 6 | வார்டு 18 சானல்ரோடு சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9.90 | 1) K. டேவிட்<br>2) A. ஜெயக்குமார் | 0. 03% குறைவு<br>மதிப்பீட்டு விகிதம் |
| 7 | வார்டு 20 மார்த்தாண்டம் நந்தன்காடு சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 5.30 | 1) G. சுரேஷ்<br>2) C. சுரேஷ் | 0. 02% குறைவு<br>0.02% அதிகம் |
| 8 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. இராமசுவாமி ஐயர் நினைவு பூங்கா பராமரிப்பு பணி செய்தல் | 8.50 | 1) S. பாபு<br>2) R. சுரேஷ்ராஜ் | 0. 21% குறைவு<br>2.43% அதிகம் |

அ.கு. :– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 8 வரை குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3020**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள் 12–09–2017 மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறுசீரமைப்பு ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/அஜி, நாள் 19–10–2017–ன்படி குழித்துறை நகராட்சியின் 21 வார்டுகளும் மறுசீரமைப்பு செய்து வார்டு மறுவரையறை செய்ய வேண்டி, கருத்துரு மற்றும் வரைபடம் தயார் செய்ய உத்தேசம் ரூ.1,00,000/– தேவைப்படும். எனவே வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்ய வேண்டி உத்தேச செலவு ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3021**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN.74W.0236 கழிவுநீர் டேங்கர் லாறிக்கு 2017–2018–ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று 8–12–2017–ல் முடிவடைவதால் மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய ரூ.21560/– மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மோட்டார்வாகன பராமரிப்புத்துறை ந.க.எண்.ஆ4/9401/17 Major பழுது 2017–19, நாள் 27–10–2017–ன்படி Ganesh Motor Works, Nagercoil நிறுவனத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் அரசு துறை ஊர்திகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனம் மூலம் வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3022**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள் 12–09–2017 மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறுசீரமைப்பு ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள் 19–10–2017–ன்படி குழித்துறை நகராட்சியில் 21 வார்டுகளும் மறுசீரமைப்பு செய்து மறுவரையறை செய்ய வேண்டி பத்திரிகை விளம்பரம் செய்த வகைக்கு ரூ.10,017/–க்கான பில் தொகை வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கும், செலவினத்தொகைக்கான பில் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. :– பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3023**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN.74Z.4605–க்கு 21–08–2018–ல் தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தின் பழுதுகள் சரி செய்வதற்கு ரூ.53,500/–ற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு T.V.Sundaram Iyengar & Sons Ltd. மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற TVS நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3024**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 6

திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் தெருவிளக்கு பணிகளுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்வதற்கான மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு குழித்துறை நகராட்சியின் பங்குத் தொகை ரூ.4,158/–ஐ கோவில்பட்டி நகராட்சிக்கு அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1406/2017/ஆ1, நாள் 30–10–2017–ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3025**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.14989/P1/2016–2, நாள் 22–09–2017–ன்படி 14–வது மத்திய நிதிக்குழு மானியம் இந்நகராட்சிக்கு ரூ.47,72,676/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீட்டின்படி கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 தாலுகா அலுவலகம் சந்திப்பு முதல் படப்பறை குளம் செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் மற்றும் வடிகால் ஒடை சரி செய்தல் | 7.50 |
| 2 | வார்டு எண்.9 விளவங்கோடு William House முதல் நகராட்சி எல்கை முடிவு வரை சாலையில் சிமெண்டு தளம் அமைத்தல் | 7.90 |
| 3 | வார்டு எண்.10 விளவங்கோடு சாலையிலிருந்து கிழங்குவிளை செல்லும் சாலையில் சிமெண்டு தளம் அமைத்தல் | 4.90 |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு எண்.15 தேவன்விளை சாலையில் பேவர் பிளாக் அமைத்தல் | 5.50 |
| 5 | வார்டு எண்.21 மார்த்தாண்டம் சந்தை அருகில் Vinod Hospital செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 5.90 |
| 6 | வார்டு எண்.18 சானல்ரோடு சாலையில் சிமெண்டு தளம் அமைத்தல் | 9.90 |
| 7 | வார்டு எண்.20 மார்த்தாண்டம் நந்தன்காடு சாலையில் சிமெண்டு தளம் அமைத்தல் | 5.30 |
| 8 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. இராமசுவாமி ஐயர் நினைவு பூங்கா பராமரிப்பு செய்தல் | 8.50 |

மேற்கண்ட பணிகளை 14–வது மத்திய நிதிக்குழு மானியத்தின்கீழ் செய்வதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை விட கூடுதலாக உள்ள தொகை ரூ.7,67,324/– வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
அ.கு. :– மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3026**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சியின் மக்கும் மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் சப்ளை செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.2920/2014/அ4, நாள் 4–1–2018–ன்படி Arumbakkan Co-operative Society Ltd. என்ற நிறுவனத்திற்கு உரிய விதிமுறைகளுக்குட்பட்டு 10,000/–ம் ஸ்டிக்கர்கள் மற்றும் 15,000/–ம் நோட்டிஸ்கள் அச்சடித்து வழங்க உத்தரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3027**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை மற்றும் இதர குத்தகை இனங்கள் 1–4–2018 முதல் 31-03-2021 முடிய மூன்றாண்டு காலங்களுக்கு 18-01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க பொது ஏலம் நகராட்சி அலுவலகத்தில் குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வரிசை எண்.1 முதல் 11 முடிய பொதுஏலம் நடைபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண் | உரிமங்களின் விபரம் | ஏலத்தாரர் பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | அதிகபட்ச உயர்ந்த தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் காய்கறிச் சந்தையின் நுழை வாயிலில் கட்டணம் வசூல் செய்தல், கடைவாடகை, வாழைக்குலை உறையிட கட்டணம் வசூல் செய்தல் மற்றும் தரைவாடகை வசூல் செய்யும் உரிமையையும் சேர்த்து | எம். வினில்ராஜ்<br>எம். கிறிஸ்துராஜ் | 7721000<br>7726000 | 7702000<br>7794348 | -<br>7794348 |
| 2 | பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துக்களிலிருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 3 | காய்கறி சந்தைக்குள் இருக்கும் ஆடு, மாடு கோழி அடிக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 4 | மார்த்தாண்டம் பழைய தியோட்டர் சந்திப்பிலுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் கல்பாலத்தடியில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 5 | மார்த்தாண்டம் மினிபார உந்து நிலையம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 6 | குழித்துறை மாலை சந்தை மற்றும் குழித்துறை அம்மன்கோயில் பக்கம் உள்ள இடஙகளில் பொருட்களை விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 7 | வாவுபலிப் பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள கன்று காலிச் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (செவ்வாய் கிழமை மட்டும்) | K.G.கிருஷ்ணதாஸ்<br>S. பிரகாஷ் | -<br>- | 125000<br>115000 | 125000<br>- |
| 8 | மார்த்தாண்டம் லாறிப்பேட்டை கழிப்பறை கட்டணம் வசூல் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 9 | மார்த்தாண்டம் காய்கறி சந்தைகள் கட்டண கழிப்பறை மற்றும் பி.பி.முனிசாமி வணிகவளாக கட்டிடத்தில் உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 10 | மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள இருசக்கர வாகன காப்பகம் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 11 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | | | |

அ.கு. :–1) குத்தகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வரிசை எண்.1 மார்த்தாண்டம் காய்கறி சந்தை குத்தகை உரிமம் அனுபவிக்க 1–4–2018 முதல் 31–3–2021 முடிய மூன்று வருட காலத்தில் முதல் ஓராண்டு காலத்திற்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.77,94,348/–க்கு எம். கிறிஸ்துராஜ் என்பவர் உயர்ந்த கேள்விக் கேட்டுள்ளார். இந்த தொகையானது கடந்த ஆண்டு குத்தகை தொகையினை விட ரூ.1,00,000/–ம் அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகையான ரூ.73,33,764/– விட அதிகமாக இருப்பதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

2) வரிசை எண்.2, 3, 4, 5, 6, 8, 9, 10 மற்றும் 11 ஆகிய இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

3) வரிசை எண்.7–க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ள திரு.K.G.கிருஷ்ணதாஸ் என்பவர் கொடுத்துள்ள தொகை ரூ.1,25,000/– கடந்த ஆண்டு குத்தகை தொகையினை விட ரூ.8,290/– அதிகமாக இருப்பதாலும், மூன்று வருட சராசரி தொகையான ரூ.78,160/– விட அதிகமாக இருப்பதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3028**
**வரிசை 1 மற்றும் 7 தவிர மீதமுள்ள இனங்களுக்கு மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 19–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 11 ஒய்.எம்.சி.எ. சாலை முதல் துரும்பல் விளை சாலை வரை தார் சாலை புதுப்பித்தல் | 3.50 | 1) திரு.A. ஆன்றணி, பாகோடு<br>2) திரு.V. பாலகிருஷ்ணன் | 0.40% குறைவு<br>3.48% அதிகம் |
| 2 | வார்டு 4 பெருந்தெருவில் கோபி வீடு முதல் அம்மன்கோவில் ரோடு வரை தார் சாலை செப்பனிடும் பணி செய்தல் | 5.70 | 1) திரு.T. அமிர்தராஜ்<br>2) திரு.V. பாலகிருஷ்ணன் | 0.4% குறைவு<br>6.63% அதிகம் |

அ.கு. :–வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு. A. ஆன்றணி (பாகோடு) மற்றும் வரிசை எண்.2 திரு.T. அமிர்தராஜ் ஆகியோரது குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3029**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒகி புயலால் பாதிப்பு அடைந்த மரங்கள், மின்கம்பங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றை புகைபடம் எடுத்து எடிட் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்அலுவலகம் அனுப்பி வகைக்கு ரூ.2295/– மற்றும் மேற்படி மரங்கள், சாலைகள்மற்றும் மின்கம்பங்கள் ஆகியவற்றை புகைபடம் எடுத்து எடிட் செய்து எ4. அளவு புகைப்படம் மூன்று நகல்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய வகைக்கு ரூ.1720/– பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர் மன்றத்தீர்மான எண். 3030**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 6–12–2017–ம் நாளைய ஆய்வறிக்கையின்படி குழித்துறை நகராட்சி கலவை உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள Windrows Platform–ல் உரம் தயாரிக்கும் கூட அமைப்பதற்கான Detailed Project Report தயார் செய்து (Autocad Plan, Autocad Site Plan, Cross Section) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலியில் (3 நகல்கள்) சமர்ப்பிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி DPR தயார் செய்த வகைக்கு ரூ.6400/– பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர் மன்றத்தீர்மான எண். 3031**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.